www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

11 - STD

# முதல் திருப்புதல் தேர்வு - 2023

## பொதுத்தமிழ்

நேரம்: 3.00

பதிவு எண்.

மதிப்பெண்கள்: 90

பகுதி - I

14 x 1 = 14

**அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. ஆ) கொடுக்கப்பட்ட 4 விடைகளில் சரியான விடையை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1. "கபாட புரங்களைக் காவு கொண்ட பின்னும் காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" அடி மோனையை தெரிவு செய்க.

   அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்

   இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

2. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

   1. வெள்ளிவீதியார் - அ) புறநானூறு
   2. அண்ணாமலையார் - ஆ) சி.சு.செல்லப்பா
   3. வாடிவாசல் - இ)குறுந்தொகை
   4. இளம்பெருவழுதி - ஈ) காவடிச்சிந்து

   i) அ, ஆ, இ, ஈ ii) ஆ, ஈ, அ, இ iii) இ, ஈ, ஆ, அ iv) இ, ஈ, அ, ஆ

3. கூற்று - 1 : தஞ்சைப் பெரிய கோவிலுள்ள ஓவியங்களை எஸ்.கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.

   கூற்று - 2 : அங்குள்ள சோழர்காலத்து ஓவியங்கள் ஃபிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை.

   அ) கூற்று - 1 சரி, கூற்று - 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு

   இ) கூற்று - 1 தவறு, கூற்று - 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி

4. யாரோ அனுதினம் உனைப்போல் உழைப்போர்? எது? எவர் மொழி?

   அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்

5. பிழையான தொடரைக் கண்டறிக.

   அ) பதநீரிலிருந்து பணங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றை தயாரிக்கின்றனர்.

   ஆ) எதிலிக் குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.

   இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை நந்து ஐங்குறு நூறு நூல்கள் உடையது.

   ஈ) யானைகளால் வெகு தொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறிய முடியும்.

6. துன்பப்படுபவர் ____________.

   அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்

   இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

7. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ________ என்பதாகும்.

   அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

8. பூஜை, விஷயம், உபயோகம் - என்பவை முறையே _____ என்று தமிழில் வழங்கப்படும்.

   அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி

   இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) வழிபாடு, செயல்பாடு, செய்தி

9. வேவு பார்த்திடுவான் ; ஓசையின்றிச் சென்றிடுவான்.

   அ) படியாள் ஆ) பட்டதாரி இ) உளவாளி ஈ) கொடையாள்

10. PROSPECTUS - என்பதன் கலைச்சொல்.

    அ) எழுதுசுவடி ஆ) விளக்கச்சுவடி இ) குறிப்புச்சுவடி ஈ) விடைச்சுவடி



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

11. மருத நிலத்தின் உரிப்பொருள் www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

அ) புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆ) ஊடலும் ஊடல் நிமித்தமும்

இ) பிரிதலும் பிரிதல் நிமித்தமும் ஈ) இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

12. ஒட்டுப் போடாத
ஆகாயம் போல - இந்த
உலகமும் ஒன்று தான் - இக்கவிதையில் பயின்று வருவது.

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

13. KVT COMPLEX - என்பதன் பொருள்.

அ) குறிஞ்சி, வஞ்சி, திருச்சி, வளாகம் ஆ) குறிஞ்சி, வஞ்சி, தொண்டி, வளாகம்

இ) கொற்கை வஞ்சி, தொண்டி, வளாகம் ஈ) கொற்கை வஞ்சி, தண்டை, வளாகம்

14. 2011 - ஆம் ஆண்டு கணினிப் பாடப்பிரிவு இளநிலைப் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற திருநங்கை

அ) நர்த்தகி நடராஜ் ஆ) பிரித்திகா யாஷினி

இ) ஜோயிதா மோண்டல் மாகி ஈ) தாரிகா பானு

## பகுதி - II பிரிவு - 1

**ஏதேனும் 3 வினாக்களுக்கு விடை தருக.** **3 x 2 = 6**

15. திருச்சாழல் - குறிப்பு வரைக.
16. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாக புறநானூறு கூறுகிறது?
17. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
18. மாசில்லாத உயர் தமிழ் பற்றி பாரதிதாசன் கூறும் கருத்துக்கள் யாவை?

## பிரிவு - 2

**ஏதேனும் 2 வினாக்களுக்கு விடை தருக.** **2 x 2 = 4**

19. இனம், மொழி குறித்த இரசூல் கம்ரதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
20. ஜீவா அவர்களின் நெஞ்சோடு வளர்ந்த கனவு யாது?
21. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது.

## பிரிவு - 3

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடை தருக.** **7 x 2 = 14**

22. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக. அ) பாரிலை ஆ) பூஞ்சோலை
23. மரபுரி சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. அ) மதில்மேல் பூனை ஆ) கானல் நீர்
24. என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக்கலை (செய்தித்தொடராக்குக)
25. பகுபத உறுப்பிலக்கணம் தருக. (ஏதேனும் ஒன்று) அ) ஈட்டினார் ஆ) பறித்தார்
26. விடைக்கேற்ற வினாவைத் எழுதுக?
திருக்குறளை ஐரோப்பியரும் படித்துபயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ஜீ.யு. போப்.
27. வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக.
அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.
28. மெய்ப்புத் திருத்தக குறியீடுகளுக்கு உரிய பொருளைத் தருக. அ)  ஆ) 
29. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் எழுதுக.
கலை, களை, கழை



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

30. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.

அ) கேரிக்கை    ஆ) சந்தோஷம்    இ) ராஜ்ஜியம்    ஈ) விசா

## பகுதி - III   பிரிவு - 1

**ஏதேனும் 2 வினாக்களுக்கு விடை தருக**    **2 x 4 = 8**

31. "கலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.
32. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுபவன யாவை?
33. "குற்றாலக் குறவஞ்சி" குறிப்பு வரைக?
34. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

## பிரிவு - 2

**ஏதேனும் 2 வினாக்களுக்கு விடை தருக.**    **2 x 4 = 8**

35. ஜீவாவின் பேச்சு, நடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?
36. மலைக் குடியிருப்புகள் குறித்து நீவீர் அறிவன யாவை?
37. தாமஸிகம் என்றால் என்ன?
38. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

## பிரிவு - 3

**ஏதேனும் 3 வினாக்களுக்கு விடை தருக.**    **3 x 4 = 12**

39. குறிஞ்சித் திணையை விளக்குக.
40. உவமை அணி (அல்லது) சொற்பொருள் பின்வரும் நிலையணியை சான்ற தந்து விளக்குக.
41. மெய்ப்புத் திருந்துநர் பணிவேண்டி நாளிதழ் முதன்மையாசிரியருக்கு கீழ்க்காணும் விவரங்களுடன் தன்விவரக்குறிப்பு ஒன்று எழுதுக.
(பெயர், வயது, பாலினம், பிறந்தநாள், பெற்றோர், முகவரி அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, அறிந்த மொழிகள், எடை, உயரம், குருதி வகை, கல்வித்தகுதி)
42. தமிழாக்கம் தருக.

அ) No body can hurt me without my permission.

ஆ) An eye for an eye only ends up, making the whole world blind.

இ) You must be the change your wish to see in the world.

ஈ) The weak can never forgive forgiveness is the attribute of the strong.

43. இலக்கிய நயம் பாராட்டுக.
பின்வரும் பாடலைப் படித்துப் பொருள் உணர்ந்து ஏற்ற நயங்கள் நான்கு எழுதுக.

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
    சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
    பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
    எல்லாம் சுதந்திரம் இருந்தால் தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
    நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.    - நாமக்கல் கவிஞர்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக** **3 x 6 = 18**

44. அ) பாரதிதாசன் ஒரு "புரட்சிக்கவி" என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க (அல்லது)
ஆ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கி கட்டுரையாக்குக.

45. அ) சுந்தரராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக (அல்லது)
ஆ) "இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயந்தே இருந்தன" - இக் கூற்றினை மெய்ப்பிக்கவும்.

46. அ) நர்த்தகி நடராஜின் நேர் காணல் வழி நீங்கள் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக. (அல்லது)
ஆ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுது** **4 + 2 = 6**

47. அ) சிற்றூரும் ............. எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடலை எழுதுக.
ஆ) "இலன்" - என முடியும் குறட்பாவை எழுதுக.

www.Padasalai.Net



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com